முன்னர் ஏற்றுக் கொண்டவர்கள் பணியாற்ற வராத நிலைமையும் உண்டு. அவர்களுக்குக் கோடைக்கானலில் கட்டடம் இல்லை என்பதால் கட்டடங்களை மட்டும் மலைக்குக் கீழே வழங்கிவிட்டால் போதாது. இந்தச் சூழ்நிலைகளை எல்லாம் எண்ணிப் பார்த்து இந்தப் பல்கலைக் கழகத்தை ஒரு தனித்தன்மை உள்ளதாக வளர வழி செய்ய வேண்டும். இன்னும் சொல்லப்போனால் 'நான்-அஃபிலியேட்டிங்' என்று சொல்லப்படுகிற ஒரு கருத்து மட்டும் இதற்குத் தனித் தன்மையல்ல. மகளிர் பேரளவினர் தொடர்பு கொண்டு, பங்கேற்கும் வகையில் அமைவதே இதன் தனிச் சிறப்பு ஆகும். பிரச்சினைகளைப் பற்றி அணுகி ஆராய்ந்து அதன் மூலமாகக் கிடைக்கக்கூடிய பலன் பரவலாக மகளிர் சமுதாயத்திற்குக் கிடைப்பதற்கு இது முதல் கட்டத்தில் உருவாகி இருப்பதன் காரணத்தால் சென்னையில் வைத்து நடத்துவதைத் தவிர இந்தப் பல்கலைக் கழகத்தின் வளர்ச்சிக்கு வேறு வழியில்லை. பெரிய குளத்திற்கு என்னசெய்யலாம் என்பது பற்றி ஆராயப்படும்.

(ஆ) கண்ணகி கோயில் கேரளாவிற்குச் சொந்தமென அம்மாநில வனத்துறை அமைச்சர் பேசியிருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் குமரி அனந்தன், எஸ். எஸ். ராமசுப்பு, அ. இரகுமான்கான் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புக் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, "தமிழகத்தின் எல்லையில் உள்ள கண்ணகி கோயில் கேரளாவிற்கு சொந்தம் என்று கேரள மாநில வனத்துறை அமைச்சர் கூறியிருப்பது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

கலைஞரின் தி. மு. க. அரசு, மீண்டும் தமிழகத்தில் ஆட்சிக்கு வந்த பிறகு, பழுதடைந்து கிடக்கும் பழமையான திருக்கோயில்களைப் புதுப்பித்து, சீரமைக்கும் பணிகளில்

முனைப்புடன் ஈடுபட்டு வருகிறது. தமிழக எல்லையில் தமிழ்ப் பேரரசன் சேரன் செங்குட்டுவனால் கட்டப்பட்ட, அதன் பிறகு சோழ மன்னர்களால் திருப்பணி செய்யப்பட்ட கண்ணகி கோயில், இன்று பாழடைந்து கிடக்கிறது. இந்தக் கோயிலைப் புதுப்பித்து, தமிழனின் பழம்பெருமையை மீண்டும் நிலை பெற்றிடச்செய்ய வேண்டும் என்பதில் மாண்புமிகு முதல் அமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களின் உள்ளுணர்வு வேறு யாருடைய உணர்விலும் கிஞ்சிற்றும் குறைந்ததில்லை.

இந்த அமைச்சரவையில் அறநிலையத்துறை, வனத்துறை அமைச்சர் என்ற வகையில் கம்பம் சட்டமன்ற தொகுதியில் 30—5—1989-ல் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது, கண்ணகி கோயில் இருக்கின்ற மலை உச்சிப் பகுதிக்கு சென்று பார்வையிட்டேன். இந்த திருக்கோயில் மிகவும் பாழடைந்த நிலையில் இருப்பதைப் பார்த்தேன். அன்றைய தினம் மதுரையில் பத்திரிகை நிருபர்களைச் சந்தித்தபோது என்னுடைய கருத்துக்களை கீழ்க்கண்டவாறு எடுத்துரைத்தேன் :—

(1) கண்ணகி கோயில் நமக்கு வேண்டுமானால் புதிதாகத்தான் கட்ட வேண்டும்.

(2) ஆதியில் சேரன் செங்குட்டுவன் கட்டிய அந்த இடத்தில்தான் அமைக்க வேண்டும்.

(3) வண்ணாத்திப்பாறை அடிவாரத்தில் கண்ணகி கோயில் அமைக்க அ. தி. மு. க. அரசு உருவாக்கிய திட்டம் ஏற்புடையது அல்ல.

இதைத் தொடர்ந்து கேரள வனத்துறை அமைச்சருடனும், அறநிலையத்துறை அமைச்சருடனும் தொடர்பு கொள்ளப்பட்டது. 7—3—1990-ல் நானும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் திருவனந்தபுரம் சென்று வனத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜோசப் அவர்களைச் சந்தித்தோம். அந்தப் பேச்சு வார்த்தையின் போதுதான் கேரள வனத்துறை அமைச்சரும், நானும் சேர்ந்து கண்ணகி கோயில் பகுதிக்குச் சென்று, பார்வையிட்டு, ஒரு முடிவுக்கு வர முயற்சிக்கலாம் என்ற முடிவு எடுக்கப்பட்டது.

திருவனந்தபுரத்தில் கேரளா நிதித்துறை, அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு விசுவநாத மேனன் அவர்களையும், வேறு சில அமைச்சர்களையும் சந்தித்து பேசினேன். கடந்த மார்ச்சு 7-ந்தேதி எடுக்கப்பட்ட முடிவுக்கு ஏற்ப, 13-4-90ல், கேரள வனத்துறை அமைச்சரும், நானும் கண்ணகி கோயில் இடத்தைப் பார்வையிட்டோம். கருத்துப் பரிமாற்றமும் செய்து கொண்டோம்.

நம்மிடம் இருக்கும் கடந்த 100 ஆண்டுகளுக்குரிய ஆவணங்களின் அடிப்படையில், கண்ணகி கோயில், தமிழக-கேரள காப்புக்காடு எல்லையில், நமது பகுதியில்தான் இடம் பெற்று இருக்கிறது என்பதில் ஐயப்பாடு ஏதும் இல்லை.

10-05 மணி

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்த விவர அறிக்கையைப் படித்ததற்குப் பிறகும் எனக்குக் கீழ்க்கண்ட ஐயங்கள் ஏற்படுகின்றன. மார்ச் மாதம் 14-ந் தேதி, நமது மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்களுடன், கேரளத்தினுடைய வனத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. ஜோசப் அவர்களைச் சந்தித்துப் பேசிய போது அங்கேயிருக்கிற அந்த கண்ணகி கோட்டத்தைப் பற்றி, அந்தக் கோயிலைப் பற்றிப் பேசவில்லை என்றும், கஞ்சா செடி வளர்ப்பதைத் தடுப்பது பற்றியும், சந்தன மரங்களைக் கடத்துவதைத் தடுப்பதைப் பற்றியும் தான் பேசினார்கள் என்றுதான் அங்கே சொல்கிறார்கள். அப்போது கோயிலுக்கு வரும் பெரும்பாலான பக்தர்களையோ, பத்திரிகை நிருபர்களையோ, புகைப்படக்காரர்களையோ அனுமதிக்க வில்லை என்றும், அதனாலே அவர்களுக்கு உள்ளே என்ன பேச்சு வார்த்தை நடந்தது என்றே தெரியாது என்றும் அந்த மக்கள் சொல்கிறார்கள். கேரள அமைச்சர், 18வது நூற்றாண்டு வரை அந்த இடம் எங்களுக்குச் சொந்தமாக இருந்தது என்று ஆவணங்கள் இருக்கின்றன. அப்படியே ஏதாவது பேசுவதாக இருந்தாலும் கூட, இரண்டு மாநிலங்களின் முதலமைச்சர்களோ, இல்லையென்றால் மத்திய அமைச்சரோ தான் பேசவேண்டுமே தவிர, வனத்துறை அமைச்சர்கள் இதைப்பற்றிப் பேசித் தீர்க்க முடியாது என்ற பொருளில் அங்கே சொல்லியிருக்கிறார்கள். அதோடு, திரு. கோபால், எம். பி., அவர்கள் தினமலரில் வந்திருக்கின்ற ஒரு நறுக்கை எனக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதிலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கண்ணகி கோயிலை நாம் எடுத்துக் கொண்டு, அதற்குப் பதிலாக நிலம் கொடுப்போம் என்று பேசியிருப்பதாகவும் சொல்கிறார்கள். இவைகள் எல்லாம் அந்தப் பகுதியில் இருக்கிற பக்தர்கள், நம்மைப் போல கண்ணகி மீது பக்தியாக இருப்பவர்களுக்கு மிகுந்த சஞ்சலத்தை ஏற்படுத்தி இருக்கிறதே, அதுபற்றிய விளக்கத்தை நான் கேட்டு, அடுத்து ஒரு விளக்கத்தையும் கேட்க வாய்ப்பளிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: *13—4—1990-ல்* கேரள வனத்துறை அமைச்சர் அவர்களும், தமிழக வனத்துறை அமைச்சராகிய நானும் தேக்கடியில் சந்தித்து, அங்கேயிருந்த கண்ணகி கோயில் இருக்கிற அந்த மலைப்பகுதிக்குப் பார்வையிடுவதற்காகச் சென்றோம். ஏற்கெனவே

கவன ஈர்ப்பு

[திரு. கே. பி. கந்தசாமி] [1990 மே 7

அந்த மாதம் 7-ந்தேதி, திருவனந்தபுரத்தில், நானும் வனத் துறை அதிகாரிகளும் அதுபோல, அறநிலையத்துறை அதிகாரி களும் என்னோடு வந்து, அங்கே வனத்துறை அமைச்சரை யும் நிதித்துறை மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு விஸ்வநாத மேனன் அவர்களையும் சந்தித்தோம். 7-ம்தேதி வனத்துறை அமைச்சரோடு பேசியபோது, நாங்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களை அவர்கள் ஏற்றுக் கொண் டார்கள். அவராகவே தான், நாங்கள் இருவரும் அங்கே சென்று அந்த இடத்தைப் பார்வையிட்டு அதற்குப் பிறகு ஒரு முடிவிற்கு வரலாமே என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். அதன்படிதான் நாங்கள் அங்கே சென்றோம். இதற்கிடையில் கேரள சட்டசபையில் இந்தப் பிரச்சினை கிளப்பப்பட்டது. அந்தப் பிரச்சினையைப் பற்றி, கேள்வி எழுப்பப்பட்டபோது, கேரள வனத்துறை அமைச்சர் அவர்கள், இந்த பிரச்சினையில் இதுபற்றி டிஸ்பியூட் இல்லை, தகராறு இல்லை. கேரள அரசுக்கும் தமிழ்நாட்டுக்கும் தகராறு இல்லை என்பது போல வும், இது முடிந்த காரியம் என்றும், கண்ணகி கோயில் கேரள எல்லையில்தான் இருக்கிறது என்பதுபோல ஒரு பதிலைச் சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு தேக் கடிக்கு வந்தபோது அங்கே இருவரும் சேர்ந்து சென்று, கண்ணகி கோயிலைப் பார்வையிடவேண்டுமா என்ற ஒரு கேள்வியை எழுப்பினார்கள். நான் சொன்னேன். இருவரும் இதுவரை வந்துவிட்டோம், இதற்குப் பிறகு சேர்ந்து பார்வை யிடாமல் போனால் நன்றாக இருக்காது என்று நான் சொல்லி சொல்லி, அதை அவர் ஏற்றுக் கொண்டு இருவரும் பார்வை யிட்டோம். அதிகாரிகளின் வேண்டுகோளுக்கிணங்க அதிக மான அளவில் நிருபர்களையோ, புகைப்படக்காரர்களையோ நாங்கள் அழைத்துச் செல்லவில்லை.

10-10 மணி.

அதற்குப் பிறகு, அப்போதும் நான் அவர்களிடத்திலே கேட் டேன். இது சம்பந்தமாக உங்களிடத்திலே, அதாவது இது உங்களுடைய எல்லையிலேதான் இருக்கிறது. கண்ணகி கோயில் இருந்த இடம், இப்போது அப்படி வழிபடத் தக்க அளவுக்கு உள்ள இடமாக இல்லை. இடிந்த சிலைகள் தான் அங்கே இருக்கின்றன. இருந்தாலும் அந்த இடம் கேரளாவினுடைய எல்லையிலே தான் இருக்கிறது என்று சொல்லும் அளவுக்கு ஆவணம் இருக்கிறதா என்று கேட்டேன். அவர்கள் தேடித் தேடி அதிகாரிகளிடத்தில் கேட்ட பிறகு இறுதியாகக் கொடுத்தது. டைகர் சேங்க்சுவரி பக்கத்திலே இருக்கிற, புலிகள் காப்பகத்தினுடைய வரைபடத்தை

அங்கே போட்டிருக்கிறார்கள். அந்த வரைபடத்திலே கேரள எல்லையிலே கண்ணகி கோட்டம் இருப்பதாகக் காட்டியிருக்கிறார்கள். அது கேரள அரசு தயாரித்த ஒரு படம் அது தவிர வேறு ஆவணம் இருக்கிறதா என்று கேட்டேன். அவர்களிடத்தில் அப்படி ஆவணம் ஏதும் இல்லையென்று தான் சொன்னார்கள்.

ஆனால், இங்கே காங்கிரஸ் கட்சியினுடைய துணை தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் சொல்லும்போது முதலமைச்சர்கள் மட்டத்தில் தானே, இந்தப் பிரச்சினையைப் பற்றி பேசி தீர்க்க முடியும் வனத்துறை அமைச்சருக்கு அங்கே என்ன வேலை என்ற கேள்வியை எழுப்பினார்கள். ஏனென்றால் வனத் துறை அமைச்சர்களுடைய துறை இரண்டு எல்லையிலும் அது இருக்கின்ற இடம். கேரள வனத் துறை, அது போல தமிழக வனத் துறை இருக்கிற இடம் அது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தப்பிரச்சினையை, நம்முடைய மாநிலத்தினுடைய அறநிலையத்துறை அமைச்சராக, வனத் துறை அமைச்சராக பொறுப்பேற்ற பிறகு கேரள அரசோடு தொடர்பு கொண்டபோது நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். தமிழக முதலமைச்சருடைய உத்தரவின்பேரில் முதலமைச்சர்கள் சந்தித்துப் பேசுவதற்கு முன்பாக 'வாட் ஆர் தி இஸ்யூஸ்', உள்ளபடியே உள்ள பிரச்சினைகள் என்னென்ன என்பதை திட்டவட்டமாக வரையறுப்பதற்கு தான் கேரள வனத் துறை அமைச்சரும், தமிழக வனத் துறை அமைச்சரும் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்தோம், இந்தப் பிரச்சினையை நாங்களாகவே தீர்த்து விட முடியும் என்ற நம்பிக்கை இல்லவே இல்லை. நாங்கள் முதலில் சந்தித்து பிரச்சினைகள் என்னென்ன என்பதைப் பற்றி முடிவு செய்த பிறகு முதலமைச்சர்கள் மட்டத்தில் பேசி, பிறகு இந்திய நாட்டினுடைய பிரதமர் மட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டால்தான், பரிசீலிக்கப்பட்டால்தான் இந்தப் பிரச்சினைக்கு முடிவு வரும் என்று நான் கருதுகின்றேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் சொல்லும்போது திரு. கோபால் ஏதோ ஒரு கருத்தைச் சொல்லியிருப்பதாகச் சொன்னார்கள். நான் முதன் முதலாக அங்கே சென்றது 30—5—1989 அன்று ஆகும். அன்றைக்குத்தான் கம்பம் பகுதிக்கு நானாகவே சென்று பார்வையிட்டேன். அப்படி பார்வையிட்டு திரும்பியபோது அந்த விவகாரத்தினுடைய தன்மை பற்றி ஆழம் பற்றி அதிகமாக எனக்குத் தெரியாது. இருந்தாலும் என்னிடத்தில் அங்கே

ஒன்றைச் சொன்னார்கள். அங்கே எம். ஜி. ஆர். காலத்திலே, இந்தக் கோவிலை அங்கே கட்டுவதற்குப் பதிலாக, மலை உச்சியில் கட்டுவதற்குப் பதிலாக வண்ணாத்திப் பாறையின் அடிவாரத்தில் சுற்றுலாத்துறை மூலமாக கண்ணகிக் கோட்டம் ஒன்றை அமைக்க திட்டமிடப்பட்டு, அது மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு அது மத்திய அரசால் நிராகரிக்கப் பட்டது. நான் நிருபர்களிடத்திலே ஒன்றைச் சொன்னேன். கண்ணகிக் கோட்டம் என்று சுற்றுலாத்துறை மூலமாக எங்கே வேண்டுமானாலும் அமைக்கலாம். பூம்புகார் கோட்டம் அமைத்திருக்கிறோம், அது போல இங்கே வள்ளுவர் கோட்டம் அமைத்திருக்கிறோம். அதுபோல கண்ணகி கோட்டம் சுற்றுலாப் பயணிகளுக்காக எங்கே வேண்டுமானாலும் அமைக்கலாம். வண்ணாத்திப்பாறையின் அடிவாரத்திலும் அமைக்கலாம் என்று. ஆனால் கண்ணகிக் கோவில் என்று அமைக்க வேண்டுமென்றால் அது எங்கே முதலில் கட்டப்பட்டதோ, அந்த மலையின் உச்சியிலேதான் கட்டப்பட வேண்டுமென்ற கருத்தை நான் சொன்னேன். இது தகராறாக இருந்து கொண்டிருக்கிறது. ஒருவேளை, அந்த இடம் கேரள அரசு இன்றைக்கு சொல்லுகின்றபடி, அவர்களுடைய எல்லையிலே இருக்குமேயானால், அவர்களிடத்திலேயிருந்து நாம் கேட்டு வாங்க முடியும்.

10-15 மணி.

அப்படிக் கேட்டு வாங்கும்போது, வாட்டர் ஷெட்லைனை தங்களுடைய எல்லையைத் தீர்மானிக்கின்ற ஒரு அளவுகோல் என்று எடுத்துக்கொள்கிறார்கள். அப்படியானால் இங்கே அரை ஏக்கர் நிலத்தை அல்லது ஒரு ஏக்கர் நிலத்தை அவர்கள் நமக்காக விட்டுத்தரக்கூடிய நிலைமை இருந்தால், அதற்குப் பதிலாக பக்கத்திலுள்ள மலையிலே அரை ஏக்கர் நிலமோ அல்லது ஒரு ஏக்கர் நிலமோ நாம் கொடுத்துவிடலாம். 'கொடுத்துவிடலாம்' என்றுதான் சொன்னேன். விட்டுக் கொடுத்துவிடுவோம் என்று சொல்லவில்லை. அரை ஏக்கர் நிலமென்பது பெரிய காரியமல்ல. கண்ணகிக் கோயில் தான் முக்கியம். அதற்குப் பிறகு நம்முடைய ஆவணங்களிலே பார்க்கிறபோது 1883-லே இருந்து நம்மிடத்திலே மேப் இருக்கிறது. அந்தக் காலத்திலே திருவிதாங்கூர் ஸ்டேட், மெட்ராஸ் பிரசிடென்சி ஆகிய 2 மாநிலங்களுக்கிடையே தீர்மானிக்கப்பட்ட வரைபடம் நம்மிடத்திலே இருக்கிறது. அதுமட்டுமல்ல, 1975-76-லே சர்வேயர் ஜெனரல் ஆஃப் இந்தியா இந்த இடத்தைச் சர்வே செய்திருக்கிறார்கள். அதற்கான அரசியல் ரிக்கார்ட்ஸ் நம்முடைய கையிலே இல்லை. அந்த சர்வே-படியும் இந்த இடம்

தமிழக எல்லையில்தான் இருக்கிறது என்பது தெரிய வருகிறது. ஆகவே கண்ணகி கோயில் இருந்த இடம் நம்முடைய எல்லையிலேதான், அந்தக் கேரள-தமிழக எல்லைப் பகுதியிலே, நம்முடைய பகுதியிலே இருக்கிறதென்பதை இப்போது நாங்கள் அறிய வருகின்றோம். ஆகவே, மேற்கொண்டு என்ன செய்வதென்பதைப் பற்றி நாம் தீர்மானிக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, சித்திரா பவுர்ணமி 8, 9, 10 தேதிகளிலே கொண்டாடப்பட இருக்கிறது. கம்பம், கூடலூர் பகுதிகளிலிருந்து மட்டுமல்ல, ஈழத்திலிருந்தும், கேரளத்திலிருந்தும், மலேயா திருநாட்டிலிருந்தும் ஆட்கள் அங்கே வருவார்கள். ஒரு விழா நடைபெறுகிறபோது, நானும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினராக இங்கே இருந்த திரு. நெடுமாறன் அவர்களும் அங்கே சென்றபோது போலீஸ் கெடுபிடி அதிகமாக இருந்தது. அதைப்போல இந்தத் தடவை இருந்தால், மக்களுக்கு கஷ்டம் ஏற்படும். நம்முடைய பெண்கள் குத்துவிளக்கு பூஜை என்று வைத்து, வருகின்றவர்களுக்கு அன்னதானம் செய்வார்கள். மணிமேகலை அட்சய பாத்திரம் என்று ஒன்றை வைத்து, ஊரிலே இருக்கிற மக்கள் எல்லாம் புளியோதரை போன்றவற்றைக் கொண்டு வந்து அதிலே போட்டு, வருகின்ற மக்களுக்கெல்லாம், ஆயிரக்கணக்கான மக்கள் வந்தாலும், அவர்களுக்கெல்லாம் அள்ளி அள்ளிக் கொடுக்க, அது அள்ள அள்ளக் குறையாத மணிமேகலையின் அட்சய பாத்திரம் என்பதைக் காட்ட, ஒரு பக்கம் எடுத்துக்கொண்டேயிருப்பார்கள். இன்னொரு பக்கம் போட்டுக்கொண்டே இருப்பார்கள். . . .

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் அப்படிப்பட்ட அட்சய பாத்திரத்தை சென்னைக்கும் கொஞ்சம் கொடுக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கே கேள்வி பதில் கூட அள்ள அள்ளக் குறையாமல் போய்க்கொண்டிருக்கிறது. (சிரிப்பு)

திரு. குமரி அனந்தன் : சென்னையிலே கூட ஒரு நாளை நாம் குறிப்பிட்டு, ஒரு பக்கத்தில் போடுகிற மக்கள் போட்டாலும், இன்னொரு பக்கத்தில் எடுக்கிற மக்கள் எடுக்கலாம் என்று சொன்னால் ஒரு அட்சய பாத்திரத்தைக் கொண்டு வந்துவிடலாம். மாண்புமிகு பேராசிரியர் அவர்களும், மாண்புமிகு முதல்வரவர்களும் அதற்கு திட்டமிட்டால் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம். எனவே இப்படி மணிமேகலையின் அட்சய பாத்திரம் என்று சொல்லக்கூடிய வகையில் அந்த பழைய சரித்திரங்களை

[திரு. குமரிஅனந்தன்]

நினைவூட்டுவதோடு, மழை வேண்டல், குழந்தை வேண்டல் போன்ற வேண்டுதல்களைக்கூட நிறைவேற்ற நிறைய பக்தர்கள் அங்கே வருகிறார்கள். எனவே அவர்களெல்லாம் இந்தத் தடவை யாவது எந்தவிதமான துன்பமும் இல்லாமல் போய், அந்தக் கண்ணகிக் கோட்டத்திலே, மங்கல தேவி என்று இன்றைக்கு அழைக்கப்பட்டாலும், அது கண்ணகிக் கோட்டம்தான், அந்தக் கண்ணகிக் கோட்டத்திற்குச் சென்று, அவர்கள் வழிபட வாய்ப்பு வேண்டும்.

10-20 மணி.

இன்னும் ஒன்றை மட்டும் சொல்கிறேன். ஏனென்றால் மாண்புமிகு அமைச்சரவர்கள் முதலிலே சொல்கிறபோது கேரள அமைச்சர் அப்படி சட்ட மன்றத்தில் பேசிவிட்டார். எங்களுடையதுதான் என்று சொல்லிவிட்டார் என்று சொன்ன நேரத்தில், ஒரு மறுப்பை வெளியிட்டிருக்க வேண்டும். ஏனென்றால் அது நிலைபேறுடையதாக ஆகிவிடக் கூடாது. இரண்டாவது நமது அமைச்சர் பெருமகனார் சொன்னார்கள். நான் இந்த பொறுப்புக்கு புதிதாக இருந்த காரணத்தினாலே பல்வேறு ஆவணங்களைப் பார்க்க முடியாத நிலையில், கண்ணகிக் கோவிலை நாம் எடுத்துக்கொண்டு, வேறு இடம் கொடுப்பது என்றோ, அல்லது அவர்கள் ஒரு ஏக்கரை எடுத்துக் கொண்டால் நாம் ஒரு ஏக்கர் எடுத்துக் கொள்வது என்றெல்லாம் பேசினோம் என்று சொன்னார்கள். நான் உங்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். கேரள அமைச்சர் சொன்னது எல்லா விதமான ஆதாரங்களுக்கும் மாறானது. கண்ணகிக் கோட்டம் இருக்கின்ற இடம் நம்முடையது என்பதற்கு ஏராளமான ஆதாரங்கள் இருக்கின்றன. ஒருவர் பூம்புகாரிலிருந்து கண்ணகி சென்ற வழியிலே நடந்து சென்று, கண்ணகி அங்கே வேப்ப மரத்தடியிலே தான் நின்று இருக்க வேண்டுமென்று நிரூபித்திருக்கிறார். அந்த கண்ணகியினுடைய சிலையின் ஒரு பகுதி தஞ்சைப் பல்கலைக் கழகத்திலே வைக்கப்பட்டு, அதை ஆராயும்போது அது சேரன் செங்குட்டுவன் காலத்து அளவுக்குக்கொண்டு போகப்பட்டிருக்கிறது, பாண்டியர்கால அளவுக்குக் கொண்டு போகப்பட்டிருக்கிறது. எனவே கண்ணகி கோட்டத்தைப் பொறுத்தவரையில் தாங்கள் தயவுசெய்து, தாங்கள் சொல்ல வேண்டுவது. இந்த அவையிலே நீங்கள் ஒன்றிரண்டு குறிப்புகள் கொடுத்தாலேயே கூட அது அவர்களுக்குச் சொந்தம் என்பது போலேயே வருவது போலே தெரிகிறது. இது ஒரு உணர்ச்சிவசப்பட்ட காரியம். நமக்கே சொந்தம் என்பதையும், நமது பக்தர்கள் அங்கே செல்வதற்குரிய வழிவகைகளைக் காண வேண்டும் என்பதையும் உங்கள் கவனத்துக்குக் கொண்டுவருகிறேன்.

1990 மே 7]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் அவர்கள் இங்கே இது ஒரு உணர்ச்சிவயப்பட்ட காரியம் என்று குறிப்பிட்டார்கள். இதில் உண்மை நிலையை அறிவதற்கு உணர்ச்சிவயப்படாமல அணுக வேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய கொள்கையாக இருக்கிறது. கடந்த காலத்திலே கழக ஆட்சி இருந்தபோது, அவர்கள் குறிப்பிட்ட கண்ணகியினுடைய சிலையின் தலை ஒன்று கரந்தைப் புலவர் கோவிந்தராசன் அவர்களால் எங்களிடத்திலே கொண்டுவந்து காட்டப்பட்டு, அது இமயமலையிலே உள்ள கல்லை ஒத்ததாக இருக்கிறது : சேரன், செங்குட்டுவன் அங்கே எழுப்பிய ஆலயம், அங்கே அமைத்த சிலை இதுவாகத்தான் இருக்க வேண்டும் என்று கூறிய பிறகு அப்போது கழக அரசு அதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டு, கேரள அரசோடு பேச்சுவார்த்தை நடத்தியது. அதற்குப் பிறகு இடைக்காலத்திலே எத்தகைய பேச்சுவார்த்தைகள், என்னென்ன வகையிலே நடைபெற்றன என்பன போன்ற விவரங்கள் என்னிடத்திலே இப்போது தெளிவாக இல்லை என்றாலும் கூட இந்தப் பிரச்சினையைக் கேரள சட்டசபையிலே எழுப்பி அதற்கு விளக்கமான பதில் அளித்ததாலும், இங்கே எழுப்பி அதற்கு விளக்கமான பதில் அளிப்பதாலும், அவரவர்களும் தங்களுக்குத் தான் சொந்தம் என்கின்ற வகையிலே ஒரு உறுதியான நிலையை எடுப்பதாலும், நல்லது நடக்காமல் போய்விடக் கூடும் என்று நான் அஞ்சுகின்றேன். எனினும் இங்கே இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டதைத் துணையாகக் கொண்டு, விரைவிலே கேரள அரசோடு தொடர்புகொண்டு சுமுகமாக இந்தப் பிரச்சினை தீர்வதற்கு அரசு வழி காணும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இடையிலே நடைபெறுகின்ற சித்திரா பௌர்ணமி விழாவுக்கு மக்கள் செல்வதைப் பற்றி இங்கே இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்போதே கேரளாவிலே இருக்கின்ற சபரி மலை அய்யப்பன் கோவிலுக்குத் தமிழ்நாட்டிலே இருந்து மக்கள் செல்ல எந்தத் தடையும் இல்லை. ஒருவேளை கேரளாவுக்குத் தான் கண்ணகி கோவில் சொந்தம் என்றாலும்கூட, கண்ணகி கோவிலுக்குச் செல்வோர்களைத் தடுக்க கேரள அரசு முன்வராது என்றே நான் நம்புகின்றேன். சொந்தம் யாருக்கு என்பதைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம் : அதுவரையிலே சொந்தம் கொண்டாட வருகின்ற பக்தர்களை அவர்கள் தடுக்காமல் இருப்பார்கள் என்று நான் நம்புகின்றேன். எனினும், விரைவிலே நான் கேரள முதலமைச்சரைச் சந்திக்கின்ற ஒரு வாய்ப்பு கோவையிலே ஏற்பட்டு இருக்கிறது. அவரிடத்திலே அது குறித்துப் பேசுவேன் என்று கூறி, இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் பேசுகிறபோது நான் கொடுத்து இருக்கின்ற குறிப்பிலே கூட அந்த இடம் அவர்களுக்குத் தான் சொந்தம் என்ற அளவிலே இருக்கின்றது என்பது போன்ற ஒரு தொனியில் இருப்பதாகத் தெரிவித்தார்கள். அதில் கடைசிப் பாராவைப் படித்துப் பார்த்தால் தெரியும். நம்மிடம் இருக்கின்ற, கடந்த 100 ஆண்டு களுக்குரிய ஆவணங்களின் அடிப்படையில் கண்ணகி கோவில் தமிழக - கேரள காப்பு காட்டு எல்லையில் நமது பகுதியில்தான் இடம் பெற்று இருக்கின்றது என்பதிலே ஐயப்பாடு இல்லை என்று மிகத் தெளிவாகச் சொல்லி இருக்கின்றேன் என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விளக்கத்திற்குப் பிறகு வினாத் தேவை இல்லை என்று கருதுகிறேன்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கற்புத் தெய்வமாக கண்ணகியை நம் தமிழர்கள் கொண்டாடிக்கொண்டு இருக்கிறார்கள். அந்தக் கண்ணகியின் சிலை இருக்கின்ற அந்தப் பகுதிகளிலே தமிழர்கள் பெருவாரியாகச் செல்கின்றார்கள். அங்கே செல்வதற்கும், நமது தமிழக அரசானது—மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னது போல கேரள அரசோடு சுமுகமாக அதைப் பேசி—இங்கே வள்ளுவர் கோட்டத்தை எப்படி ஏற்படுத்தி வள்ளுவனுக்கு ஒரு பெருமையைத் தேடிக் கொடுத்ததோ, அதுபோல அங்கே கண்ணகிக்கு ஒரு கோட்டத்தை ஏற்படுத்திக் கொடுத்து, அதன் நிர்வாகத்தை நமது தமிழகத்தின் கீழ் கொண்டுவர வேண்டும் என்பதைக் கேட்டு, அதைக் கொண்டு வருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மீண்டும் சொல்கிறேன். சுமுகமாக இது முடிவடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும் சொல்ல விரும்புகிறேன். இன்று முதலே பக்தர்கள் அங்கே செல்வதற்கு சூழ்நிலை இருப்பதாக காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் என்னிடத்திலே அறிவித்தார்கள். இன்றைக்கே கேரள அரசோடு தொடர்புகொண்டு அவர்கள் வருவதற்கு எந்தத் தடையும் இல்லாமல் விழா காணுவதற்கோ, அங்கு இருக்கின்ற கண்ணகி இடத்தில் அவர்களுடைய முறைப்படி, அவர்களுடைய வழிபாடுகளைச் செய்வதற்கோ தடை இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேரள அரசோடு இன்றைக்கே தொடர்புகொண்டு நிச்சயமாகப் பேசுவோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

1990 மே 7]

10-25 மணி

திரு. அ. இரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் பிறந்த மதுரை மாவட்டத்தின் பகுதியிலே இந்தக் கண்ணகி கோயில் இருக்கிற காரணத்தினாலே, அதனுடைய உரிமை பற்றி இங்கே பலரும் எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாக, இங்கே ஏற்கெனவே வைக்கப்பட்ட அறிக்கைகளில் கூட........

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே நான் சொன்ன பிறகும் திரு. இரகுமான்கான் பேச வேண்டுமென்று விரும்பினால் பேசலாம். ஏனென்றால், மிக முக்கியமான பிரச்சினை. அவர்கள் குறிப்பிட்டதைப்போல உணர்ச்சிவயப் பட்ட ஒரு பிரச்சினை. இதிலே நாம் மோதுதலை ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது.

4. அறிக்கைகள் அளித்தல்.

(அ) பொதுக் கணக்குக் குழு.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1989—90ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்தாறு முதல் நாற்பத்தெட்டு வரையிலான (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கைகளை அளிக்கிறேன்.

போதிய அவகாசம் இன்மையால் அச்சிட்ட பிரதிகளுக்குப் பதிலாக படி எடுத்த பிரதிகள் அளிக்கப்பட்டுள்ளன. ஆதலால் இவ்வறிக்கையின் பிரதிகள் சட்டமன்ற நூலகத்தில் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைத்தவுடன் அவை பேரவை உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பிவைக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) சட்டவிதிகள் ஆய்வுக் குழு.

திரு. பி. துரைசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1989—90-ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் ஏழாவது மற்றும் எட்டாவது (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கைகளை அளிக்கிறேன்.

5. சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்).

(அ) நிதி ஒதுக்க (எண். 3) சட்டமுன்வடிவு, 1990.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண். 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 25/1990) *ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதன்மீதான விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்.

*5-5-1990-ம் நாளிட்ட சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றது.